ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1773/36 - 2012 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.08.30

*1773/36 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம்*

*அதியுத்தமராம் சனாதிபதியினால் வழங்கப்பட்ட 2012 பெப்புருவரி 29 ஆந் திகதியிடப்பட்ட 1747/10 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட 2010, நவெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட 1681/3 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் செயலாற்றுகின்ற கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 36 (1) ஆம் பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதியின் சம்மதம் பெறப்பட்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டயாப்பின் 44 (2) ஆவது உறுப்புரையுடன் வாசிக்கத்தக்கதாக, மேற்குறித்த சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 1988 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆந் திகதியிடப்பட்ட 508/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் இரண்டாவது அட்டவணையினை பின்வருமாறு திருத்துகின்றேன்.*

*ரிசாத் பதியுதீன்,*
*கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்.*

*கொழும்பு,*
*2012, ஓகத்து 21.*

இரண்டாவது அட்டவணை

| | | ரூபா |
|---|---|---|
| 1. | கேள்வி கோருபவருக்கு முகவராக, துணை முகவராக, பிரதிநிதியாக அல்லது அவர் சார்பாக நியமனம் பெற்றவராக பதிவு செய்வதற்கான விண்ணப்பம். | 1,500.00 |
| 2. | ஒரு பொது ஒப்பந்தத்தை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் | 7,500.00 |
| 3. | ஒரு பதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் | 1,500.00 |
| 4. | ஒரு பொது ஒப்பந்தத்தை மீள் - பதிவதற்கான விண்ணப்பம் | 7,500.00 |

*9-422*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.